# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.125/2016 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா– 01 ( PW– 01 ) |
| பெயர் | :- | கோவிந்தன் |
| தேதி | :- | 18–11–2025 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :–**

நான் இந்த வழக்கை பாகப்பிரிவினைக்காக தொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 07-ஆம் பிரதிவாதி பாக்கியத்திற்கும் எனக்கும் உறவு முறை இல்லை என்றால் சரிதான். புல எண் 289/11 ல் 606 சதுரடி இடத்தை 07-ஆம் பிரதிவாதி பாக்கியம் பொன்னுசாமி வகையறாவிடம் 06.10.1958-ஆம் தேதியன்று கிரயம் வாங்கினார் என்று சொன்னால் அது சரிதான். 20.06.2002-ஆம் தேதியன்று கொமாரகவுண்டர் மகன் சின்னப்ப கவுண்டர், சின்னப்ப கவுண்டர் மகன்கள் செல்லப்பன், கோவிந்தராஜ், தங்ராஜ், மகள்கள் பழனியம்மாள், இலட்சுமி ஆகியோர் 07-ஆம் பிரதிவாதி பாக்கியத்தின் நலச்சார்பாக மேற்சொன்ன அதே புல எண்ணில் மற்றொரு 609 சதுரடி, 1794 சதுரடி என மொத்தம் 2394 சதுரடி இடத்தை பொறுத்து விடுதலைப்பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் சரிதான். ஆனால் எங்கள் நிலத்தை சேர்த்து எழுதிக் கொடுத்துவிட்டார்கள்.

மேற்சொன்ன இரு ஆவணங்களின் அடிப்படையில் வழக்குச் சொத்து முழுவதையும் பொறுத்து 07-ஆம் பிரதிவாதி பாக்கியத்தின் பெயரில்

வருவாய் துறை ஆவணங்களில் பதிவு ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்தில் வில்லைவீடு ஒன்று இருந்ததா என்றால் இல்லை. அவ்வாறு ஒரு வில்லைவீடு இருந்தது என்றும் அது 07-ஆம் பிரதிவாதிக்கு சொந்தம் என்றும் அந்த வீட்டை 07-ஆம் பிரதிவாதி இடித்து -விட்டு மெத்தை வீடு கட்ட ஆரம்பித்தார் என்றும் சொன்னால் சரியல்ல. வில்லைவீடு எங்களுக்கு சொந்தமானது. நாங்கள்தான் அதை இடித்துவிட்டு மெத்தை வீடு கட்ட தொடங்கினோம். வீட்டை இடித்ததற்கும் கட்டுவதற்கும் அனுமதி வாங்கியது சம்மந்தமான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதற்காக விண்ணப்பித்துள்ளேன். இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

முதலேற்பு வழக்கு எண் 98/2004 வழக்கை நாங்கள் தொடுத்தோம் என்றால் சரிதான். அதில் 05-ஆம் பிரதிவாதியாக உள்ள பாக்கியம்தான் இந்த வழக்கின் 07-ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அதன்மீது நாங்கள் மேல்முறையீடு தாக்கல் செய்தோம். வாதி தரப்பு 01-ஆம் சான்றாவணம் சுவாதீன ஒப்படைப்பு இரசீது என்றால் சரிதான். வாதி தரப்பு 01-ஆம் சான்றாவணத்தை 07-ஆம் பிரதிவாதி பாக்கியம் அம்மாள் எழுதிக் கொடுக்கவில்லை என்றும் அதில் உள்ள கைரேகை பாக்கியம் அம்மாளின் கைரேகை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த ஆவணத்தை அடிப்படையாக கொண்டுதான் நான் இந்த வழக்கை தொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

வழக்குச் சொத்தின் தற்போதைய சந்தை விலை மதிப்பு 50 இலட்சம் உரூபாய்க்கு அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். வாதி தரப்பு 01-ஆம்

சான்றாவணம் முத்திரை தாளில் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பதிவுசெய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆகையால் வாதி தரப்பு 01-ஆம் சான்றாவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. பூர்வீகச் சொத்து என்பதால் இரசீது மட்டும் வாங்கினேன்.

எதிர்வழக்குரையில் வாதி தரப்பு 01-ஆம் சான்றாவணத்தில் கண்டுள்ள கைரேகை 07-ஆம் பிரதிவாதி பாக்கியம் அம்மாளின் கைரேகை இல்லை என்று சொல்லப்பட்டுள்ள விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது என்றும் தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கைரேகையை ஒப்பிட்டு பார்க்க நாங்கள் நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை. தற்போதுகூட நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளேன்.

முதலேற்பு வழக்கு எண் 707/2002 வழக்கில் வழக்குச் சொத்து 07-ஆம் பிரதிவாதிக்கு சொந்தம் என்று முடிவுசெய்யப்பட்டது என்றால் மேல் முறையீட்டில் அந்த தீர்ப்பு இரத்து செய்யப்பட்டுவிட்டது. மேல்முறையீட்டு வழக்கு எண் 98/2004 வழக்கிலும் வழக்குச் சொத்து 07-ஆம் பிரதிவாதிக்கு சொந்தம் என்றுதான் முடிவுசெய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த மேல்முறையீட்டில் புல எண் 289/11 ல் அதிகபடியான இடம் எதுவும் இல்லை என்று முடிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மேற்சொன்ன வழக்கு நடவடிக்கையின் அடிப்படையில் வழக்குச் சொத்தில் வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் பாகப்பிரிவினை கோர எங்களுக்கு உரிமையில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதி தரப்பு 01-ஆம் சான்றாவணம் பொய்யாக புனையப் -பட்டுள்ளது என்றும் அதனால்தான் கைரேகை தெளிவில்லாமல் பதியப்

-பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. அந்த ஆவணத்தின் அடிப்படையில் நாங்கள் வழக்குச் சொத்தில் எவ்வித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல.

வழக்குச் சொத்தில் புல எண் 289/11 ல் 2400 சதுரடிகள் சம்மந்தமாக வேறு நீதிமன்றத்தில் ஏதேனும் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளீர்களா என்றால் சரிதான். வழக்குச் சொத்தை பொறுத்து 20.06.2002-ஆம் தேதியன்று ஏற்பட்ட விடுதலைப்பத்திரம் மூலம் 07-ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. 1524 எண் கொண்ட பட்டா 07-ஆம் பிரதிவாதி பெயரில்தான் உள்ளது என்றால் சரியல்ல. 07-ஆம் பிரதிவாதி வாதிகள் வகையறாவினர்மீது சுவாதீன ஒப்படைப்பு இரசீது செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கோரி முதன்மை மாவட்ட உரிமையியல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல்செய்து தற்போது முதலேற்பு வழக்கு எண் 270/2018 தாக்கல்செய்து நிலுவையில் இருந்துவருகின்றது என்றால் சரிதான். மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும்போது விளம்புகை பரிகாரம் கேட்டு முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் முதலேற்பு வழக்கு எண் 539/2023 தாக்கல்செய்துள்ளீர்களா என்றால் சரியல்ல. இந்த வழக்கு விளம்புகை மற்றும் வழக்குச் சொத்தை ஒப்படைக்கும் பரிகாரம் கோரியுள்ளது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.